தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள

கோவை	94425 04156
மேட்டுப்பாளையம்	94878 42563
பெ.நா.பாளையம்	98425 63953
சூலூர்	98422 44599
அன்னூர்	91502 49095
பொள்ளாச்சி	89034 44119
மதுக்கரை	73735 45727
வால்பாறை	94863 24619

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

கோயம்புத்தூர்	: 97902 12447
மேட்டுப்பாளையம் & அன்னூர்	: 77088 26235
சூலூர்	: 73730 55255
மதுக்கரை	: 88701 48269
பொள்ளாச்சி	: 90435 00177

உதவி மைய எண் : 88070 00216

பேரூர் தமிழ்க் கல்லூரியில் நூலகத்தின் வளர்ச்சிப் பணிக்கான ஆலோசனை

பேரூர் சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நொய்யல் நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் (இடமிருந்து) சக்தி மசாலா நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் சாந்தி துரைசாமி, சக்தி மசாலா நிறுவனங்களின் தலைவர் துரைசாமி, நடிகர் சிவகுமார், சிரவை ஆதீனம் தவத்திரு இராமானந்த குமரகுருபர அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிந்து சமவெளி ஆய்வு மையத்தின் மதிப்புறு ஆலோசகர் ஆர்.பாலகிருஷ்ணன், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குநர் சுந்தர் கணேசன், விஜயா பதிப்பக நிறுவனர் மு.வேலாயுதம்.

கோவை, நவ.9: பேரூர் சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல் தமிழ்க் கல்லூரியில் சென்னை ரோஜா முத்தையா நூலகத்தின் வளர்ச்சிப் பணிக்கான ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பேரூர் சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியில் ஒரு நூலகத்தின் பயணம் என்ற தலைப்பில் சென்னை ரோஜா முத்தையா நூலகத்தின் வளர்ச்சிப் பணிக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு இராமானந்த குமரகுருபர அடிகளார் ஆகியோர் தலைமை வகித்துப் பேசினர்.

இதில், விஜயா பதிப்பக நிறுவனர் மு.வேலாயுதம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குநர் சுந்தர் கணேசன், சக்தி மசாலா நிறுவனங்களின் இயக்குநர் சாந்தி துரைசாமி, சக்தி மசாலா நிறுவனங்களின் தலைவர் துரைசாமி, சிந்து சமவெளி ஆய்வு மையத்தின் மதிப்புறு ஆலோசகர் ஆர்.பாலகிருஷ்ணன், நடிகர் சிவகுமார் ஆகியோர் ஒரு நூலகத்தின் பயணம் குறித்தும், சிந்து சமவெளி ஆய்வு குறித்தும் பேசினர். இதைத்தொடர்ந்து, நொய்யல் என்ற நூல் வெளியிடப்பட்டது.

நாளைய மின்தடை: கவுண்டம்பாளையம்

கோவை, நவ.9: கவுண்டம்பாளையம் துணை மின்நிலையத்துக்கு உள்பட்ட பகுதிகளில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் செவ்வாய்க்கிழமை (நவம்பர் 11) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையில் கீழ்க்கண்ட பகுதிகளில் மின்விநியோகம் தடை செய்யப்படவுள்ளதாக செயற்பொறியாளர் க.பசுபதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நல்லாம்பாளையம் மின்பாதை: ஹவுஸிங் யூனிட், ஏஆர் நகர், தாமரை நகர், ஓட்டுநர் காலனி, சாமுண்டீஸ்வரி நகர், சுகுணா நகர், யூனியன் சாலை, அசோக் நகர், முருகன் நகர், பாரதி நகர், தாயாள் வீதி, தீயணைப்பு பகுதி, நல்லாம்பாளையம் சாலை, டிவிஎஸ் நகர் சாலை, ஜெம் நகர், ஓம் நகர், அமிர்தா நகர், கணேஷ் லே அவுட், சபரி கார்டன், ரங்கா லே அவுட், மணியகாரம்பாளையம் சில பகுதிகள்.

சாய்பாபா காலனி மின்பாதை: இந்திரா நகர், காவேரி நகர், ஜீவா நகர், காமராஜ் வீதி, கேகே புதூர் 6-ஆவது வீதி, ஸ்டேட் பாங்க் காலனி, கிருஷ்ணா நகர், கணபதி லே அவுட், கேஜி லே அவுட், கிரி நகர், தேவி நகர், அம்மாசைக்கோனார் வீதி, கிருஷ்ணம்மாள் வீதி, என்ஆர்ஜி வீதி மற்றும் சின்னம்மாள் வீதியின் ஒரு பகுதி.

இடையர்பாளையம் மின்பாதை: பிஅன்ட் டி காலனி, பூம்புகார் நகர், டிவிஎஸ் நகர், அருண் நகர், அன்னை அமிர்தா நகர், ராமலட்சுமி நகர், வள்ளி நகர், சிவா நகர், தட்சண் தோட்டம்.

சேரன் நகர் மின்பாதை: சேரன் நகர், ஐடிஐ நகர், தென்றல் நகர், சரவணா நகர், பாலன் நகர், லட்சுமி நகர், ரயில்வே மென்ஸ் காலனி, ரங்கா மெஜஸ்டிக், ஸ்ரீ ராமகிருஷ்ணா நகர், தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம், கவுண்டம்பாளையம்.

லெனின் நகர் மின்பாதை: சுப்பாத்தாள் லே அவுட், சாஸ்திரி வீதி, மருதக்குட்டி லே அவுட், சம்பத் வீதி, பெரியார் வீதி, வ.உ.சி.வீதி, சிஜி லே அவுட், நெடுஞ்செழியன் வீதி, தெய்வநாயகி வீதி,

சங்கனூர் மின்பாதை: புதுத்தோட்டம், கண்ணப்பன் நகர், பெரியார் வீதி, கருப்பராயன் கோயில் வீதி.

தனி வாரியத்திடம் ஹிந்து கோயில்களை ஒப்படைக்க வேண்டும்: ஹெச். ராஜா

பொள்ளாச்சி, நவ. 9: தமிழகத்தில் உள்ள ஹிந்து கோயில் நிர்வாகங்களை ஹிந்து ஆன்றோர், சான்றோர் அடங்கிய தனித்து இயங்கும் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் ஹெச்.ராஜா கூறினார்.

பொள்ளாச்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சி நிர்வாகி இல்ல விழாவில் பங்கேற்க வந்த பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் ஹெச்.ராஜா, செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஹிந்து ஆன்றோர், சான்றோர் அடங்கிய தனித்து இயங்கும் வாரியத்திடம் ஹிந்து கோயில்களின் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும் என குன்றக்குடி அடிகளார் தலைமையிலான கமிட்டி கூறியுள்ளது. இதை தமிழகத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

கடந்த 2021-இல் நீதியரசர்கள் மகாதேவன், ஆதிகேசவலு அடங்கிய அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பில் 75 வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளது. 6 வாரங்களுக்குள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கோயில்களுக்குச் சொந்தமான நிலம் விவரம், குத்தகை விவரம், ஆக்கிரமிப்பில் உள்ள நில விவரம் உள்ளிட்டவை குறித்து பதிலளிக்க கூறியது. ஆனால் இதுவரை திமுக அரசு இதற்கு பதில் அளிக்கவில்லை.

வரும் தேர்தலில் திமுக ஆட்சியை அகற்றினால்தான் ஹிந்து கோயில்களை காப்பாற்ற முடியும் என்றார்.

வேலை நேரத்தை உயர்த்தும் முயற்சியைக் கைவிட வேண்டும்

சிஐடியூ மாநில மாநாட்டில் வலியுறுத்தல்

கோவையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 16-ஆவது சிஐடியூ மாநில மாநாட்டில் பேசுகிறார் அகில இந்தியத் தலைவர் ஹேமலதா. (வலது) பேரணியில் பங்கேற்றோர்.

கோவை, நவ.9: கோவையில் சிஐடியூ சார்பில் நடைபெற்ற 16-ஆவது மாநில மாநாட்டில், 8 மணி நேர வேலைநேரத்தை உயர்த்தும் முயற்சிகளை மத்திய அரசு கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவையில் சிஐடியூ 16-ஆவது மாநில மாநாடு கடந்த நவம்பர் 6 ஆம் தேதி தொடங்கி நவம்பர் 9-ஆம் தேதி வரையில் 4 நாள்கள் நடைபெற்றது. தொடக்க நிகழ்ச்சிக்கு மாநிலத் தலைவர் அ.சௌந்தரராஜன் தலைமை வகித்தார். சி.பத்மநாபன் வரவேற்றார். அகில இந்திய பொதுச் செயலாளர் தபன் சென் மாநாட்டை தொடங்கிவைத்தார்.

இதனைத்தொடர்ந்து பிரதிநிதிகள் மாநாட்டில், மாநில பொதுச் செயலாளர் ஜி.சுகுமாறன் ஸ்தாபன அறிக்கையை முன்மொழிந்தார். பிரதிநிதிகள் மாநாட்டை மூத்த தொழிற்சங்கத் தலைவர் டி.கே. ரங்கராஜன், அகில இந்திய துணைத் தலைவர் ஏ.கே. பத்மநாபன், விவசாயிகள் சங்கத் தலைவர் டி. ரவீந்திரன், விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவர் எம். சின்னதுரை, அகில இந்திய செயலாளர் ஆர். கருமலையான் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

மாநாட்டில், மத்திய அரசின் 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளைத் திரும்பப் பெற வேண்டும். 8 மணி நேர வேலை நேரத்தை உயர்த்தும்முயற்சிகளைக்கைவிட வேண்டும். அரசுத் துறைகளில் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும். 'சம வேலைக்கு சம ஊதியம்' தீர்ப்பை அமல்படுத்த வேண்டும். தமிழ்நாடு மின்சாரத் துறையைப் பொதுத் துறையாகப் பாதுகாக்க வேண்டும். பட்டாசு தொழிலில் வெடி விபத்துகளைத் தடுத்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். கூட்டுறவு சங்கங்களுக்கு உடனடித் தேர்தல் நடத்த வேண்டும். ஆட்டோ மீட்டர் கட்டணம் அறிவித்து ஆட்டோ செயலியை அமல்படுத்த வேண்டும். கரோனா கால கட்டத்தில் மூடிய தேசிய பஞ்சாலைகளை மீண்டும் திறந்து ஊழியர்களுக்கு பணிப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். தேனி அண்ணா கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும். கட்டுமான நலவாரிய நிதி மடைமாற்றத்தை நிறுத்த வேண்டும். அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்க வேண்டும். சாலையோர வியாபாரிகள் பாதுகாப்புச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநிலத் தலைவராக ஜி.சுகுமாறன் தேர்வு

மாநாட்டின் நிறைவு நாளில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில், சிஐடியூ மாநிலத் தலைவராக ஜி.சுகுமாறன், பொதுச் செயலாளராக எஸ்.கண்ணன், பொருளாளராக ராஜேந்திரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

அதே போல, உதவி பொதுச் செயலாளர்களாக வி.குமார், கே.திருச்செல்வன், கே.ஆறுமுக நயினார், முத்துகுமார் உள்ளிட்ட 41 நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து, ராமகிருஷ்ணா மருத்துவமனை அருகில் இருந்து ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற உழைப்பவர் உரிமைப்பேரணி நடைபெற்றது. இறுதியாக சிவானந்தா காலனியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சிஐடியூ அகில இந்திய தலைவர் டாக்டர் ஹேமலதா, பொதுச்செயலாளர் தபன் சென் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நிலை காவலர் தேர்வு: கோவை மாவட்டத்தில் 3,584 பேர் எழுதினர்

கோவை, நவ. 9: கோவை மாவட்டத்தில் 3 மையங்களில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாம் நிலை காவலர் தேர்வை 3,584 பேர் எழுதினர்.

காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்புத் துறைகளில் காலியாக உள்ள 3,665 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் அண்மையில் வெளியிட்டது. இதற்காக மாநிலம் முழுவதும் சுமார் 2.25 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தனர்.

மாநகரில் இரு மையங்கள்: கோவை மாநகரில் பிஎஸ்ஜி கலைக் கல்லூரி, என்ஜிபி கல்லூரி என இரு மையங்களும், புறநகர் பகுதியில் எஸ்என்எஸ் கல்லூரியும் (ஒரு மையமும்) என மொத்தம் 3 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மாநகரில் இந்தத் தேர்வுக்கு மொத்தம் 1,842 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், இரு மையங்களிலும் 1,523 பேர் தேர்வு எழுதினர். 319 பேர் தேர்வு எழுதவில்லை. தேர்வு நடைபெற்ற இரு மையங்களிலும் மாநகர காவல் ஆணையர் ஆ.சரவணசுந்தர் நேரில் ஆய்வு செய்தார்.

புறநகரில்... : கோவை புறநகர் பகுதியில் விண்ணப்பித்தவர்களுக்கு சரவணம்பட்டி எஸ்என்எஸ் தொழில்நுட்பக் கல்லூரியில் மையம் அமைக்கப்பட்டிருந்தது. புறநகர் பகுதிகளில் இந்தத் தேர்வுக்கு 2,582 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், ஆண்கள் 1,678 பேர், பெண்கள் 382 பேர், மூன்றாம் பாலினத்தவர் ஒருவர் என மொத்தம் 2,061 பேர் தேர்வை எழுதினர். இதேபோல, ஆண்கள் 412 பேர், பெண்கள் 109 பேர் என மொத்தம் 521 பேர் தேர்வை எழுதவில்லை. தேர்வு எழுதியோரின் சதவீதம் 79.8 சதவீதம் ஆகும். காவலர் தேர்வு நடைபெற்ற எஸ்என்எஸ் கல்லூரி தேர்வு மையத்தை மேற்கு மண்டல ஐஜி செந்தில்குமார், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கே.கார்த்திகேயன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தேர்வு மையங்களுக்கு காலை 8 மணி முதல் 9.30 மணிக்குள் வந்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். தேர்வில் முறைகேடுகளைத் தடுக்கும் வகையில் நிகழாண்டு முதல்முறையாக விண்ணப்பதாரர்களின் இடது கை பெருவிரல் ரேகை பதிவை சரிபார்க்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. தேர்வு அறைக்குள் கைப்பேசிகள், ஸ்மார்ட் வாட்ச்கள் உள்ளிட்ட மின்னணு சாதனங்கள் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

விழிப்புணர்வுப் பேரணி...

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் தொடர்பான வாக்காளர் விழிப்புணர்வுப் பேரணியை கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கிவைத்த மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான பவன்குமார் க.கிரியப்பனவர்.

நீலகிரி மக்களவைத் தொகுதியில் நவம்பர் 21 முதல் 'சான்சத்' விளையாட்டுத் திருவிழா

கோவை, நவ.9: நீலிகிரி மக்களவைத் தொகுதியில் 'சான்சத்' விளையாட்டுத் திருவிழா-2025 நவம்பர் 21-ஆம் தேதி தொடங்குகிறது.

பிரதமர் மோடியின் வழிகாட்டுதலின்படி, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா முன்னெடுப்பில் நாடு முழுவதும் உள்ள மக்களவைத் தொகுதி உறுப்பினர்கள் சார்பில் 'சான்சத்' விளையாட்டுத் திருவிழா-2025 நடைபெற்று வருகிறது.

அதன்படி, நீலகிரி மக்களவைத் தொகுதியில் உள்ள இளைய தலைமுறையினரின் விளையாட்டுத் திறனை அங்கீகரிக்கும் விதமாகவும், வெற்றி பெறுவோரைத் தேர்ந்தெடுத்து தேசிய, சர்வதேச மற்றும் ஒலிம்பிக் போன்ற போட்டிகளுக்குத் தயார் செய்யும் விதமாகவும் 'சான்சத்' விளையாட்டுத் திருவிழா நீலகிரி மக்களவைத் தொகுதி முழுவதும் நடைபெறுகிறது.

இந்தப் போட்டிகள் நவம்பர் 21-ஆம் தேதி தொடங்கி தனிநபர் மற்றும் குழு நபர்கள் கலந்து கொள்ளும் வகையில் நடைபெறுகிறது. இந்தப் போட்டிகளில் பங்கேற்க விரும்புவோர் www.sansadkhelmahotsav.com என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். பதிவுக்கட்டணம் இல்லை.

இறகுப்பந்து போட்டிகள் நவம்பர் 21-ஆம் தேதி முதல் நவம்பர் 23-ஆம் தேதி வரையும், கால்பந்து போட்டிகள் நவம்பர் 28-ஆம் தேதி முதல் நவம்பர் 30-ஆம் தேதி வரையிலும், கைப்பந்து, கபடி, கோகோ போட்டிகள் டிசம்பர் 5 -ஆம் தேதி முதல் டிசம்பர் 7-ஆம் தேதி வரையிலும், டர்ஃப் கிரிக்கெட் போட்டிகள் டிசம்பர் 12-ஆம் தேதி முதல் டிசம்பர் 14-ஆம் தேதி வரையிலும், தனிநபர்களுக்கான சிலம்பம், யோகா 3 பிரிவுகள் (ஆடவர், மகளிர்) டிசம்பர் 5- ஆம் தேதி முதல் டிசம்பர் 7-ஆம் தேதி வரையில் நடைபெறுகிறது.

இதில், வெற்றி பெறுபவர்களுக்கு தகுந்த வெகுமதியும், கோப்பையும் பரிசாக வழங்கப்படும்.

இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு மத்திய இணை அமைச்சர் எல்.முருகனின் மேட்டுப்பாளையம் முகாம் அலுவலகத்தை 96296-15714,04254-2223333 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை சார்பில் நரம்பியல் தொடர்பான கருத்தரங்கம்

கருத்தரங்கைத் தொடங்கிவைத்த (இடமிருந்து) எஸ்என்ஆர் சன்ஸ் அறக்கட்டளை துணை நிர்வாக அறங்காவலர் எஸ்.நரேந்திரன், நிர்வாக அறங்காவலர் ஆர்.சுந்தர், நரம்பியல் துறை நிபுணர்கள் மருத்துவர்கள் அசோகன், ஆர்.லட்சுமி நரசிம்மன்.

கோவை, நவ.9: கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை சார்பில் நரம்பியல் தொடர்பான கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கை எஸ்என்ஆர் சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ஆர்.சுந்தர், துணை நிர்வாக அறங்காவலர் எஸ்.நரேந்திரன் ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

இதில், நரம்பியல் துறை நிபுணர்கள் மருத்துவர்கள் அசோகன், ஆர்.லட்சுமி நரசிம்மன், பிரகாஷ், ஆர்.முரளி ஆகியோர் இசுகீமிக் ஸ்ட்ரோக்கின் அரிய காரணங்கள், ஸ்ட்ரோக் மேலாண்மையில் செயற்கை நுண்ணறிவு, ஸ்ட்ரோட் தடுப்பில் ஆண்டிபிளேட்லெட் சிகிச்சை, உயர் ரத்த அழுத்தம் மற்றும் அபார காரணி மேலாண்மை என்பன உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் பேசினர்.

இதில், மருத்துவர் அருணா தேவி, தலைமை நிர்வாக அதிகாரி டி.மகேஷ்குமார், மருத்துவ இயக்குநர் எஸ்.ராஜகோபால், மருத்துவக் கண்காணிப்பாளர் எஸ்.அழகப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001 மின்னஞ்சல்: crmd@cityunionbank.in, போன்: 0435-2432322, கபிபகங்ள்: 0435-2431746

கடனீட்டு சொத்துக்களை ஒரைக்கமாக்குதல் / நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் படி டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/இணைகடன்தாரர்களுக்கு M/s.S N பழைய மோட்டார் பார்ட்ஸ், கதவு எண்.420, சங்கர் நகர், L I C ஆபீஸ் பின்புறம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் - 641301. 2.திரு S . நல்லமீன், நு/பெ.வஹாபுதீன், எண்.3-75A , M S B புறம் ரோடு, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் - 641301. 3.திரு.A.K.வஹாபுதீன், நு/பெ.அபுநுல்காதர், எண். 9-75A A, M S B புறம் ரோடு, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் -641301. 4.திருமதி. ஹாஜாபீவி, வ/பெ.வஹாபுதீன், எண்.3-75A A, M S B புறம் ரோடு, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் - 641301 ஆகியோர் பெற்ற கடன் நிலுவை தொகை 05.11.2025 அன்றுள்ளபடி ரூபாய்.6,67,335/- (ரூபாய் ஆறு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து முன்னூற்று முப்பத்து ஐந்து மட்டும்) மற்றும் 06.11.2025 முதல் பின்னாட்டு நாள் செலுத்தும் ஆதிய மொத்த தொகையை வருங்காலம் பொறுட்டு வங்கியின் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை 2002 ஆம் ஆண்டு கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் விதி எண் 9 ன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரி அவர்களால் சீல்வைக்கப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்து விவரம்
S.நல்லமீன் அவர்களுக்கு சொந்தமான சொத்து

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம் சிக்கதொம்பாளையம் கிராமம் பஞ்சாயத்து, உ.எண்.420, இதற்கு உட்பட்ட மொத்தம் 132 ஏக்கர் காலி நிலம் T.S.எண்.84/2A பகுதி, 6.49 ஏக்கர் நிலங்கள் உட்பிரிக்கப்பட்டு அதில் கீழ்புறத்தில் 3.24 1/2 ஏக்கர் நிலத்தில் தென்புற பகுதியில் உள்ள 1.02 1/2 நிலங்கள் வீட்டு மனைகளாக அமிர்படுத்தி செயல்பட்டு அதில் T.S எண் 84/2A பகுதி, நகராட்சி வார்டு எண்.4, வார்டு - C, பிளாக் 10, மேட்டுப்பாளையம் பயண் எல்லைக்கு உட்பட்ட ஆக்வணி காளியப்பா நகர் எனை பிரிவில் மேட்டுப்பாளையம் பயண் 166 ft - 64 சிறுமுகை ரோட்டில் கதவு எண்.420, காலி இடம் நான்கு எல்லைகள் வரக்கூடிய - T.S எண் C - 10.84/2A காலி வடபுற பகுதி இடங்கள் **கிழக்கில்** - 30 அடி அகல தெக்வடல் ரோடு, **தெற்கில்** - T.S.எண் C - 10.84/2A காலி வடபுற பகுதி இடங்கள், **மேற்கில்** - T.S.எண் C - 10.84/2A கீழ்புறத்தில் காலி இடம் ஆகிய இந்த நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட கீழ்நிலை கடபுறம் 24 1/2 அடி, தென்புறம் 18 அடி, தென்வடல் கீழ்புறம் 61 அடி, மேல்புறம் 40 அடி ஆக மொத்தம் 850 சதுரடி 1711.07 சதுர மீட்டர் அல்லது 1 செண்ட் 414 சதுரடி வீட்டு மனை முழுவதும் வழக்கமான வேகாவுட் ரோட்டை பயன்படுத்து உரிமை நடைப்பாதை உரிமை முழுமையா. இந்த சொத்தானது மேட்டுப்பாளையம் பயண் எல்லைக்கு உட்பட்ட சிறுமுகை ரோட்டில் (சுங்கவணி காளியப்பா நகர் மேஜஸ்டிக் பில்டிங் 10, வார்டு C, வார்டு எண்.4, T.S.எண்.84/2A கொண்ட சொத்தாகும்

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்)

டெண்டருடன் கூடிய ஏல விற்பனை விபரம்

ஏல தேதி	ஏலம் நடைபெறும் இடம்
20.12.2025	சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், மேட்டுப்பாளையம் கிளை 20, பிரசாந் காம்ப்ளக்ஸ், இரயில்வே ஸ்டேசன் ரோடு, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் - 641301 போன் எண் : 04254-223118, செல் எண்கள்: 9382270627, 8925964888

டெண்டருடன் கூடிய ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:
(1) விற்பனையுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர், ஏலத்தில் பங்கு கொள்ள ரொக்க ஆதாரத்தை வேண்டும் மற்றும் தனக்கான ஏலம் கேட்பதாக எழுத்துப்பூர்வமான ஒரு உறுதிமொழியையும் அளிக்க வேண்டும். (2) விற்பனை உடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்க விரும்புவோர், டெண்டர் படிவங்களை சேரினேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், மேட்டுப்பாளையம் கிளை , 20, பிரசாந் காம்ப்ளக்ஸ், இரயில்வே ஸ்டேசன் ரோடு, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் - 641301 விலைகொடுத்து பெற்றுக் கொள்ளலாம். (3) விற்பனையுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் தங்களது விலை புள்ளிகளை நிர்ணயிக்கப்பட்ட டெண்டர் படிவத்தில் சீல்வைப்பட்ட உறைகளில் வைத்து, அதுடன், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் என்கின்ற பெயரில் பெறப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலையில் 10% தொகைக்கான Pay Order / கேட்பு வரைவோலையினை பிணையமாகப் தொகையாக இணைத்து "அதிகாரப் பூர்வ அதிகாரி, சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்" என முகவரியிட்டு, இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதியன்று **மதியம் 12.00 மணி** அல்லது அதற்கு முன்னதாக சமர்பிக்க வேண்டும் (4) விற்பனையுடைய டெண்டர்தாரர் ஏலம் கேட்பவர் சொத்துக்களை பார்வையிடவும் மற்றும் இதர விபரங்களுக்கும் **போன் எண் : 04254-223118, செல் எண்கள்: 9382270627, 8925964888** - ஐ தொடர்பு கொள்ளவும் (5) இந்த சொத்து விலை "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்ற வட்டில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். (6) சீல்வைப்பட்ட டெண்டர்கள் விற்பனையுடைய அனைத்து டெண்டர்தாரர்கள் முன்னிலையில் இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதி அன்று **மதியம் 01.00 மணிக்கு** திறக்கப்படும் பெறுதலை நடப்பட்ட நிலையிலான டெண்டர் விற்பனையாக இருந்தபோதிலும் நடப்பட்ட நிலையிலான டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைபுள்ளியைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர விற்பனையாளர்களின் விற்பனத்தில் மேலில் அதிகாரபூர்வ அதிகாரியின் கட்டளையின் பேரில் வெளிப்படையான திறந்த ஏலத்தினை நடத்திடலாம். இந்த நிலையில் அதிக பட்சம் ஏலம் கேட்பவருக்கு, இந்த விற்பனை வழங்கப்படும் என்றிலும் இந்த விற்பனை சிட்டி யூனியன் வங்கியினால் உறுதி செய்யப்பட வேண்டும் (7) வெற்றி பெறும் டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் விற்பனை நிலையில் 25% தொகையை **பிணை வைப்புத்தொகை செலுத்தியது உள்பட** விற்பனை **உறுதி செய்யப்பட்ட உடனேயே** செலுத்த வேண்டும். மீதி 75% தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள்ளாக செலுத்த வேண்டும் மேற்குறிப்பிட்டபடி செலுத்த தவறினால் அவரால் செலுத்தப்பட்ட 25% தொகை முழுவதும் அவர் இழக்க நேரிடும் (8) குறிப்பிடப்பட்டுள்ள தான வரையறைக்குள் மொத்த விற்பனை தொகையும் பெறுவர் கொண்ட பின்னரே, வெற்றி பெற்ற டெண்டர்தாரர் / ஏலதாரருக்கு அதிகாரபூர்வ அதிகாரியால் விற்பனை சான்றிதழ் வழங்கப்படும் (9) பதிவு கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளையும் வெற்றிபெற்ற ஏலம் கேட்பவரே ஏற்கவேண்டும் (10) அசை அசை நிலங்கள் மற்றும் உள்ளிடங்கள் நிலவரைவுக்கான செலுத்த சம்பந்தப்பட்ட சட்ட பூர்வ வரி மற்றும் வரி விகிதம் கட்டணம் மற்றும் TDS, GST மற்றும் இதர பங்கிற்கான மேற்றிபெறும் ஏலம் கேட்பவரே செலுத்த வேண்டும் (11) எந்த விற்கானாலும் கூறாமல் விலைப்புள்ளியை ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ரத்து செய்ய அதிகாரபூர்வ அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.

இடம் : கும்பகோணம், தேதி : 07.11.2025 **அதிகாரப்பூர்வ அதிகாரி**

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R நெடுங்கா தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, CIN L65110TN1960PLC003281, போன்: 0435-2402322, கபிபக